எம்.சி.ஓ.பி எண்: 5786/2025 தேதி: 16.06.2026

மசா. : 1

பெயர் : வெங்கடேசன்

த/பெ. : ராமலிங்கம்

வயது : 60

**<u>சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தின் போது என் மகன் ராயல் என்பீல்டு இருசக்கரவாகனத்தில் பயணம் செய்தார் என்றால் சரி. அந்த வண்டி அவருக்கு சொந்தமானது. இருசக்கரவாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. அதை தாக்கல் செய்திருக்கிறேன். மசாஆ 23ல் ஹெட்லைட், ஹேண்டில் பார் ஆகியவை சேதம் அடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மசாஆ 15ல் லாரிக்கு எந்த சேதமும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் மசாஆ 23ல் என் மகன் ஓட்டிச்சென்ற இருசக்கரவாகனத்திற்கு ஏற்பட்ட சேதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொல்கிறார். மாதிரிவரைபடம் தாக்கல் செய்யவில்லை. என் மகன் வேலை பார்த்த நிறுவனம் என் மகனுக்கு கொடுத்த பணி நியமன கடிதத்தை தாக்கல் செய்யவில்லை. என் மகனின் PF , ESI விவரங்கள் தாக்கல் செய்யவில்லை. என் மகனின் வருமான வரி Return தாக்கல் செய்யவில்லை. என் மகன் பி.இ படித்தார். என் மகனின் சம்பளம் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டதற்கு வங்கி கணக்கு தாக்கல் செய்திருக்கிறேன். மசாஆ 26ல் கையெழுத்து Not verified என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. மசாஆ 25ல் ஆவணங்களில் கையெழுத்து , சீல் இல்லை என்றால் சரி. என் மகன் தலைக்கவசம்அணியாமல் அஜாக்கிருதையாக சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. தலைக்கவசம் அணிந்திருந்தார். என் மகன் ஓஎம்ஆரில் உள்ள வால்மார்ட் நிறுவனத்தில் வேலை செய்தார். என் மகன் இருசக்கரவாகனத்தை லாரியில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றாலும் அதனால்தான் என் மகனின் இருசக்கரவாகனத்தின் சேதம் ஏற்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அதை மறைப்பதற்காக மாதிரி வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மசாஆ 25 ல் ஒவ்வொரு பே சிலிப்பிலும் Flexible benefit Plan என்று குறிப்பிடப்பட்டு ரூபாய் 74,010/- குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த தொகை வேலை பார்ப்பவரின் அவர்கள் செய்யும் பணியில் குறிப்பிட்ட நிலையை கடக்கும்போது கொடுப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மகனுக்கு எந்த எந்த வருடங்கள் இன்கிரீமெண்ட் வழங்கப்படும் என்பதற்கான

ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய மகனின் தொழில், வருமானத்தை குறித்து கையெழுத்து போடாத ஆவணங்களை நான் தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்பதால் அந்த ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

x

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.